**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No. 90/2019 |
| Deposition Of Witness for | Prosecution PW 1<br>Defense<br>Court |
| Name | திரு. ஓட்டக்காரன் |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2026 |

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 02nd day of March 2026.

நான் முனைஞ்சிப்பட்டியில் வசித்து வருகிறேன். இரும்பு வியாபாரம செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். வழக்கு சம்பவம் சுமார் 12 வருடங்களுக்கு முன்பு மாலை நேரத்தில் நான் ரோட்டில் சென்றுகொண்டிருந்தபோது கீழே விழுந்து எனக்கு காயம் ஏற்பட்டது என்றும், ஏற்பட்ட காயத்திற்கு திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அங்கு வந்த போலீஸார் என்னிடம் ஒரு கையெப்பம் வாங்கினார்கள். அதில் என்ன எழுதியிருந்தது என எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெப்பம் என்னுடையதுதான். அது அ.சா.ஆ.1 ஆகும். தற்போது நான் எதிரிகளுடன் சமாதான மனுவில் கையெப்பம் செய்துள்ளேன். வழக்கு பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்தனர்.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

எதிரிகளுக்கும் எனக்கும் ஏற்கனவே முன்விரோதம் இருந்தது, கடந்த 31.10.2017 ம் தேதி மாலை 04.30 மணியளவில் நீங்களும் சந்தானம் மற்றும் நண்பர்களோடு உங்கள் ஊரில் உள்ள பேச்சியம்மன் கோவில் பக்கம் நின்றுகொண்டிருந்தபோது அங்கு வந்த ஆஜர் எதிரிகள் கையில் அருவாளுடன் வந்து அசிங்கமாக பேசி, உங்கள் தலையின் இடதுபுறம் வெட்டினார் என்றும், அருவாள் பின்பக்கத்தால் முதுகில் அடித்தார் எனவும், கொலைமிரட்டல் செய்தார் எனவும், உங்களுக்கு ஏற்பட்ட காயத்திற்கு பாளையங்கோட்டை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்ந்ததாகவும், அங்கு வந்த போலீஸாரிடம் நடந்த சம்பவம் குறித்து ஒரு புகார் வாக்குமூலம் கொடுத்ததாகவும், புகார் வாக்குமூலத்திலும், போலீஸார் விசாரணையில் மேற்கண்டவாறு கூறிவிட்டு தற்போது எதிரிகளுடன் சமாதானமாக செல்வதால் தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

BOOMINATHAN
Digitally signed by BOOMINATHAN
Date: 2026.03.02 17:37:17 +0530